RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 343 | டிசம்பர்.13 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா




சென்னை, டிச.13-

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலுக்கு ஒவ்வொரு கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன. தற்போதைய நிலையில் நான்குமுனை போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திமுக தலைமையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள் மதிமுக உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்று உள்ளன. அதிமுக கூட்டணியில் பா.ஜனதா உள்ளது. இது தவிர விஜய்யின், தவெக தலைமையில் ஒரு அணியும், நாம் தமிழர் கட்சி தனி அணியாகவும் போட்டியிட உள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சியும், தேமுதிக மற்றும் டிடிவி தினகரனின் அமமுகவும் தங்கள் நிலையை இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. இந்த கூட்டணி நிலைப்பாடு மாறுதலுக்கு உட்பட்டது. எந்த கட்சி, யாருடன் கூட்டணி சேருவார்கள் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க முடியும். அதிமுக தனது கூட்டணிக்குள் பாமக மற்றும் தேமுதிகவை கொண்டு வர விருப்பப்படுகிறது. அதற்கான மறைமுக பேச்சுவார்த்தை நடக்கிறது. அதேவேளையில், இப்போது கூட்டணியில் உள்ள பா.ஜனதாவுக்கு எத்தனை சீட்டுகள் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் அந்த கட்சியினர் இடையே ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் டிச.15ம் தேதி தமிழ்நாடு வருகிறார். டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை வரும் அமித்ஷா, சென்னை, வேலூரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். மேலும் கூட்டணி விவகாரம், தேர்தல் பணிகள் குறித்து பாஜக மாநில நிர்வாகிகளுடன் அமித்ஷா ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நாளை டெல்லி சென்று அமித்ஷாவை சந்திக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







## நோயாளிகளுக்காக வழங்கப்பட்ட அரசு வாகனம் பழைய குப்பைகள் அள்ளும் வாகனமாக பயன்படுத்தப்படும் அவலம்

### மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்படுமா?

சிவகங்கை, டிச.13-

சிவகங்கை சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்தும் மருத்துவக் கழிவு பொருட்கள் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் நடமாடும் மருத்துவமனை வாகனத்தில் எடுத்து வந்து சிவகங்கை மஜித் ரோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து பழைய இரும்பு எடுப்பவர்களிடம் டாடா எசி வாகனத்தில் எடை போட்டு வழங்கிய காட்சி இவை அனைத்தும் திருமலை, கீழபூங்கொடி,இடையமேலூர், தமராக்கி,முத்துப்பட்டி போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து நடமாடும் மருத்துவமனை வாகனத்தில் எடுத்துவரப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் வேண்டுகோளாக உள்ளது.



## வேம்பத்தூர் அரசு பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா : ஊராட்சி முன்னாள் தலைவர் வி.எம். சமயமுத்து பங்கேற்பு

சிவகங்கை டிச.13

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வேம்பத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது....

இந்த நிகழ்ச்சிக்கு தலைமையாசிரியர் தலைமை வகித்திட ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சமயமுத்து மற்றும் ஜெகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினர்...

இந்நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர் சண்முகநாதன், மாணவ சங்க மேனாள் செயலாளர் ஜெகநாதன், பொருளாளர் முத்துராமன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சியின் இறுதியில் பள்ளி முதுகலை தமிழாசிரியர் சின்னச்சாமி நன்றி கூறினார்....



■ தமிழ்நாடு அரசு மற்றும் Entrepreneurship Development and Innovation Institute (EDII–TN) இணைந்து மூன்று நாள் Media Drone Operations Training Programme நடத்தப்பட்டது. இந்த பயிற்சி திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழை நேற்று துணைவேந்தர் அவர்களிடமிருந்து பெற்றார். இந்நிகழ்வில் பதிவாளர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் முன்னிலையில் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## “ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார்; திராவிட மாடல் ஆட்சி தொடரும்” : உதயநிதி



சென்னை: டிச.13-

"வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும்" என துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

திமுக இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு வரும் 14ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடக்கிறது.

இந்நிலையில், இது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “மாநிலம் மாவட்டம் மாநகரம் பேரூர் ஒன்றியம் கிளை வட்டம் என்று தமிழ்நாட்டின் எல்லாத் திசைகளிலும் வேர்விட்டிருக்கிறது திமுக இளைஞர் அணி. வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் திமுக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது.

இளைஞர் அணியின் சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிப்பதற்கு என்று ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சமூக வலைதளங்களுக்கான துணை அமைப்பாளர்களை நியமித்து வருகிறோம். ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம்.

இப்படி, முதல்வரின் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக விளங்குகிறது திமுக இளைஞர் அணி.

இப்படி, 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயல்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் திமுக இளைஞர் அணி மட்டுமே.

இப்படி, நியமிக்கப்பட்ட 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த வேண்டும் என்ற முதல்வரின் உத்தரவின்பேரில், முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பை 14.12.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடத்தவிருக்கிறோம்.

1.30 லட்சம் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூடும் பிரமாண்ட நிகழ்ச்சியாக நடக்கவிருக்கும் இந்த ‘வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்’பில் கழகத் தலைவர், முதல்வர் ஸ்டாலின் சிறப்புரை ஆற்றவிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்னும் வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக இந்த ‘இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு’ அமையும் என்பது உறுதி.” என்று தெரிவித்துள்ளார்.

## நடிப்பாற்றலால் பல தலைமுறைகளை கவர்ந்துள்ளார்: ரஜினிகாந்துக்கு பிரதமர் மோடி பாராட்டு



சென்னை, டிச.13-

நடிகர் ரஜினிகாந்த்துக்கு பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் தமிழில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ரஜினிகாந்தின் 75வது பிறந்தநாள் எனும் சிறப்பான தருணத்தில் அவருக்கு வாழ்த்துக்கள். அவரது நடிப்பாற்றல் பல தலைமுறைகளைக் கவர்ந்துள்ளது; பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது.

அவரது திரையுலகப் படைப்புகள் பல்வேறு பாத்திரங்கள் மற்றும் பாணிகளில் பரவி, தொடர்ச்சியான முத்திரைகளைப் பதித்துள்ளன. திரைப்பட உலகில் அவர் 50 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது இந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவரது நீண்டகால, ஆரோக்கியமான வாழ்க்கைக்காகப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

கள்ளம் கபடமற்ற...!

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: ரஜினிகாந்த் வயதை வென்ற வசீகரம்.

மேடையில் ஏறினால் அனைவரையும் மகிழ்விக்கும் சொல்வன்மை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத கள்ளம் கபடமற்ற நெஞ்சம்.

ஆறிலிருந்து அறுபதுவரைக்கும் அரைநூற்றாண்டாகக் கவர்ந்திழுக்கும் என் நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு உளம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

மென்மேலும் பல வெற்றிப் படைப்புகளை அளித்து, மக்களின் அன்போடும் ஆதரவோடும் தங்கள் வெற்றிக்கொடி தொடர்ந்து பறக்கட்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர், இபிஎஸ்

தமிழ்த் திரையுலகின் அசைக்க முடியாத பேராளுமையாக 50 ஆண்டுகளாக கோலோச்சி வரும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு எனது இதயங்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள். திரையரங்குகளை திருவிழாக் கூடங்களாக மாற்றவல்ல தங்களின் ஸ்டையில் மெஜிக் ரசிகர்களை மகிழ்விக்கட்டும் பல்லாண்டு.

தமிழக பாஜ முன்னாள் தலைவர், அண்ணாமலை

இன்று 75வது பிறந்த நாள் கொண்டாடும், அன்புக்கும் மரியாதைக்கும் உரிய, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு, இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எளிய பின்னணியில் இருந்து வந்து, தனது கடும் உழைப்பாலும், மேன்மையான பண்புகளாலும், ஐம்பது ஆண்டுகளாக, இந்தியத் திரையுலகின் உச்சத்தில் இருப்பவர்.

பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை, மூன்று தலைமுறைகளை தனது வசீகரத்தால் ஈர்த்திருப்பவர். சிறந்த தேசியவாதியும், பண்பாளருமான சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், மேலும் பல்லாண்டுகள் நலமுடன், ஆரோக்கியத்துடன் வாழ, இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

தமிழக பாஜ தலைவர், நயினார் நாகேந்திரன்

தமிழ் திரையுலகின் மார்க்கண்டேயன்; மூன்று தலைமுறைகளை ஆக்கிரமித்தவர்; திரையுலக வானில் நட்சத்திரமாக மிளிர்பவர்; 50 ஆண்டுகளாக மக்களின் இதயங்களில் ஆதர்ச நாயகனாக கோலோச்சி வரும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு எனது இதயம் கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

மேலும் பல ஆண்டுகள் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று திரையுலகில் பல சாதனைகளைப் படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

நடிகர் கமல்ஹாசன்

75 வருட வாழ்க்கையில், 50 ஆண்டு கால சினிமா. வாழ்த்துக்கள் நண்பா.

## இந்தியாவின் அரிசி உற்பத்தி வரலாறு காணாத உச்சத்தை தொடும்!



சென்னை, டிச13-

இந்தியாவின் அரிசி உற்பத்தி வரலாறு காணாத உச்சத்தை தொடும். கோதுமை உற்பத்தியும் அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண்மைத் துறை கணக்கிட்டுள்ளது.

நடப்பு 202526ம் ஆண்டு பருவத்தில் இந்தியாவின் அரிசி உற்பத்தி 15.2 கோடி டன்களை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறையும். கடந்த ஆண்டு 4.15 கோடி மெட்ரிக் டன் உற்பத்தியான நிலையில், 4 கோடி மெட்ரிக் டன்னாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குளிர்கால பயிரான கோதுமையின் உற்பத்தி, கடந்தாண்டு 11.3 கோடி டன் இருந்த நிலையில், 11.7 கோடி டன்னாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் டிசம்பர் 5ம் தேதி வரை 2.4 கோடி ஹெக்டேரில் கோதுமை பயிர் செய்துள்ளனர். இது கடந்தாண்டில் 2.1 கோடி ஹெக்டேராக இருந்தது.

நெல்லின் சாதனை உற்பத்திக்கு, நடவு செய்யப்பட்ட பரப்பளவு அதிகரிப்பு மற்றும் பருவகால சூழ்நிலைகள் தான் காரணம். பருத்தியை விட அதிக மகசூல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் பலர், பருத்தியை கைவிட்டு, நெற்பயிருக்கு மாறியுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை சாதகமாக இருந்ததாலும், ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சாதகமான மழை கிடைத்ததாலும், நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 84 லட்சம் ஹெக்டேராக அதிகரித்த போதிலும், உற்பத்தி குறைய வாய்ப்பு உள்ளது. இந்த விவரங்களை அமெரிக்க வேளாண் துறை, செயற்கைக்கோள் ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசு, காரீப் பருவத்தில் அரிசி உற்பத்தி 12.4 கோடி, டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டின் காரீப் உற்பத்தியை விட 17 லட்சம் டன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.




# சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக... என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி : ஒசெ. மந்தக்காளை தலைமை தாங்கினார்

சிவகங்கை டிச.13

சிவகங்கை மேற்கு ஒன்றியம் திருமாஞ் சோலையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது...

ஒன்றியப் பொருளாளர் அர.உசிலம்பட்டி பாண்டியராஜா , மாவட்ட பிரதிநிதி அரசனூர் தியாகராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர், அரசனூர் ஊராட்சி மேனாள் தலைவர் செல்வராணி அய்யப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

இந்த வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்டாங்கிபட்டி பெ. மந்தக்காளை கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்...

மேலும் எஸ்ஐஆர் படிவங்கள் மற்றும் தேர்தல் கால பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்...

இந்த ஆலோசனை கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் திரவியம், தனசேகரன் என்ற அய்யப்பன், துணை அமைப்பாளர்களான அரசனூர் செந்தில், செம்பூர் ஆறுமுகம் , ராமர் , போதிராஜா , உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...



# மானாமதுரை நகர் திமுக என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி ஆலோசனை கூட்டம்

## எம் எல்ஏ தமிழரசி, மாரியப்பன் கென்னடி, பாலசுந்தரம், ஐடி விங் ஆர்.சதீஷ்குமார்,பாலா பங்கேற்பு

மானாமதுரை, டிச.13

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்க்கழக திமுக சார்பில் பாகநிலை முகவர்கள் ஆலோசனை கூட்டமானது அவைத்தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது...

நகர திமுக பொருளாளர் மயில்வாகனம், துணைச்செயலாளர் வைஸ் சேர்மன் பாலசுந்தரம் , மாவட்ட பிரதிநிதி சுப்புராம், ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் பாலா , இலக்கிய அணி , மோகனசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

இந்த ஆலோசனை கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, நகரச் செயலாளர் பொன்னுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு எஸ்ஐஆர் படிவங்கள் குறித்தும் , தேர்தல் கால பணிகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினர்...

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட மீனவரணி பாஸ்கரன் , நகர் இளைஞரணி, கவுன்சிலர் மாரிக்கண்ணன் , சுரேந்திரன், அதியமான் பொன்னுச்சாமி,ராஜேஷ் , இராஜேந்திரன் , திருமுருகன் , செம்புக்குட்டி , கோபிக்கண்ணன் , செல்வக்குமார் ,சிவாஜி , தர்மா , பாலாஜி உள்ளிட்ட நகர திமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...




## வேலூர் அடுத்த துத்திப்பட்டு ஊராட்சியில்

# நவா கல்வி உதவி அறக்கட்டளை மையத்தில் திறனுடன் கூடிய தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மற்றும் சான்று வழங்கும் விழா

வேலூர், டிச.13-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, ஆற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துத்திப்பட்டு ஊராட்சியில் நவா கல்வி உதவி அறக்கட்டளை அலுவலகத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக நிறுவனம் சார்பில் திறனுடன் கூடிய தொழில் முனைவோர் மேம்பாட்டு 3 நாட்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். பயற்சி பெற்ற 30 பெண்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட தொழில் முனைவோர் அலுவலர் புவனா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் மற்றும் மரகன்றுகள் வழங்கி, தொழில் தொடங்கி முன்னேறுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு நவா கல்வி உதவி அறக்கட்டளை நிறுவனர் ஜி.நவக்குமார், தலைமை தாங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் TFSC முதுநிலை மேலாளர் ஏ,பார்த்தசாரதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். முன்னதாக இந்நிகழ்ச்சியை துத்திபட்டு ஊராட்சி மன்ற தலைவர் டி.ஆர்.ரவிச்சந்திரன், ஜீசஸ் மினிஸ்ட்ரி மணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான பெண்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் AICCTU, NDLF, AITUC, ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




வேலூர் டிச.13

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் ஏ ஐ சி சி டி யு, என் டி எல் எப், AICC-TU, NDLF, AITUC, உள்ளடங்கிய ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், மாவட்ட ஏ ஐ டி யு சி ஆட்டோ சங்க தலைவர் ஏழுமலை, என் டி எல் எஃப் தொழிற்சங்கம் மாவட்ட தலைவர் செல்வம், ஏ ஐ டி யு சி ஆட்டோ சங்க மாவட்ட தலைவர் என். சங்கர், ஆகியோர் தலைமையில் கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதில் ஏஐடி யூசி மாவட்ட பொதுச் செயலாளர் சிம்புதேவன், என் டி எல் எப் தொழிற்சங்க மாவட்ட செயலாளர் சரவணன், ஏ ஐ டி யு சி ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் லோகேஷ் குமார், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள், மேலும் ஏ ஐசி சி டி யு மாவட்ட பொருளாளர் வாசுதேவன் ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் வானி, ஏ ஐ டி யு சி மாவட்ட செயலாளர் சந்திரசேகர், பாலாறு பாதுகாப்பு இயக்கம் மாவட்ட அமைப்பாளர் பரசுராமன், ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினர். ஏ ஐ சி சி டி யு மாவட்ட நிர்வாகிகள் பரத், மணிகண்டன்,குமார், செந்தில்நாதன், செல்வம், சங்கர்,என் சங்கர்,ஜெயராஜ், உமாபதி, ரேவதி, செல்வம், ஜெயச்சந்திரன், நடராஜன், தனபால், ரமேஷ், செந்தில், என் என் டி எல் எப், தொழிற்சங்க மாவட்ட குழு நிர்வாகிகள் பாபு, திருமலை, சரவணன், கிருஷ்ணன், அருண்குமார், தமிழரசன், சையத், ஜிலானி, ஜான், கோபி, ஏ ஐ டி யு சி மாவட்ட குழு நிர்வாகிகள் கண்ணன், மோகனவேல், வெங்கடேசன், பாஸ்கரன், சசிகுமார், கிருஷ்ணன், அதாவுல்லா, சிலம்பரசன், பிரபா, ஆனந்தன், உள்ளிட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மோட்டார் வாகன தொழிலாளர்களை பாதிக்கின்ற 2019 மோட்டார் வாகன சட்டத்தை ரத்து செய்யவும் ஆட்டோகளுக்கான இன்சூரன்ஸ் கட்டணத்தை 50% சதவீதமாக குறைக்க ஆட்டோக்களுக்கு பெட்ரோல் டீசல் கேஸ் போன்றவற்றை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசின் இலவச பேருந்து பயணத்திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்டோ தொழிலாளர்களுக்கு ஆந்திரா அரசு ஆண்டுக்கு ரூபாய் 15,000 வழங்குவது போல் தமிழக அரசும் வழங்கிட வேண்டுமென்றும், ஆட்டோ தொழிலாளிகளின் வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்திட தமிழக அரசு 2013 ஆம் ஆண்டு ஆட்டோ கட்டணத்தை உயர்த்தியது எனவே இன்றைய பெட்ரோல் டீசல் விலக்கேற்ப ஆட்டோ கட்டணத்தை உயர்த்தி அரசாணை வெளியிடவும், வேலூர் மாநகரில் அளவுக்கு அதிகமாக ஆட்டோக்கள் ஓடுவதால் புதிய ஆட்டோக்களுக்கு பர்மிட் வழங்குவது தடுத்திட வேண்டும் எப் சி ஓட்டுநர் உரிமம் வாகனம் புதுப்பித்துக்கொள்ள கட்டணத்தை செலுத்த ஆர்டிஓ அலுவலகத்தில் தனி அலுவலர நியமன செய்ய வேண்டும் ஆட்டோ தொழிலாளர்களை நேரடியாக அனுமதி கற்கவும் புரோக்கர்களை அனுமதிக்க கூடாது, ஆட்டோ தொழிலாளர்களை தொழில் செய்துவிடாமல் தடுப்பது போய் வழக்கு போடுவது மிரட்டுவது தகாத வார்த்தையில் பேசுவது தொழிலாளர்களுக்கு தெரியாமலே ஆன்லைனில் வழக்கு பதிவு செய்வது காவல் நிலையத்தில் முடக்குவது போன்ற செயல்களில் ஈடுபடும் போக்குவரத்து காவல்துறையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# மகான் நாகூர் ஹஜ்ரத் சாகுல் ஹமீது ஒலியுல்லா தர்ஹாவின் 94 ஆம் ஆண்டு மத நல்லிணக்க சந்தனக்கூடு

சிவகங்கை, டிச.13-

தேவகோட்டை நகரில் மகான் நாகூர் ஹஜ்ரத் சாகுல் ஹமீது ஒலியுல்லா தர்ஹாவின் 94 ஆம் ஆண்டு மத நல்லிணக்க சந்தனக்கூடு நகர் வலம் வந்தது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஒத்தக்கடை மகான் நாகூர் ஹஜ்ரத் சாகுல் ஹமீது ஒலியுல்லா தர்காவின் 94 ஆம் ஆண்டு சந்தனக்கூடு விழா கடந்த நவம்பர் 21 ஆம் தேதி கொடியேற்று நிகழ்வுடன் விழா தொடங்கியது,

ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு பிரார்த்தனைகள் நடை பெற்று டிசம்பர் 10 ஆம் தேதி இன்று ஹத்தம் பாத்தியா பிரார்த்தனை செய்யப்பட்டது,அதனை தொடர்ந்து இன்று அதிகாலை நான்கு மணி அளவில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சந்தனக்கூடு ஊர்வலம் மற்றும் மாலை நேரத்தில் சந்தனக்கூடு நகர் வலம் வந்தது , இந்நிகழ்ச்சியில் ஹிந்து முஸ்லிம் கிறிஸ்தவம் என அனைத்து தரப்பு மக்கள் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக வாக்கு இயந்திரக் கிடங்கில் ஆய்வு, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான முதல் நிலை சரிபார்ப்பு பணியை வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் / மாவட்ட ஆட்சியரமான சுப்புலெட்சுமி, வாக்குப்பதிவு இயந்திரக் கிடங்கில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது தேர்தல் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தமிழ்நாடு பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர்கள் நல அமைப்பு சார்பில் கவன ஈர்ப்பு கோரிக்கை ஆர்ப்பாட்டம்

வேலூர் டிச.13

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை அண்ணா கலையரங்கம் அருகில் தமிழ்நாடு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, அனைத்து ஓய்வூதியர்கள் நல அமைப்பு வேலூர் மாநகராட்சி மாவட்ட கிளை சார்பில் கவன ஈர்ப்பு கோரிக்கை ஆர்ப்பாட்டம் வேலூர் மாநகராட்சி ஓய்வூதியர்கள் சங்க தலைவர் பன்னீர்செல்வம் தலைமையிலும், துணைத் தலைவர் கோவிந்தசாமி, கௌரவ ஆலோசகர் பந்தராமன் ஆகியோர் முன்னிலையிலும் நடந்தது. இந்த கவன ஈர்ப்பு கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் வேலூர் மாநகராட்சி ஓய்வுதேர் சங்க செயலாளர் செல்வராஜ் துவக்க உரை நிகழ்த்தினார்.

மாநில அமைப்பு செயலாளர் பொறியாளர் தேவகுமார், விளக்க உரை நிகழ்த்தினார். மாவட்ட தலைவர் பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர் பொ,குமரேசன், மாநில துணை தலைவர்கள் ரவி, பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். மேலும் மாநிலத் துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, கலந்துகொண்டு நிறைவு உரை நிகழ்த்தினர். இந்த கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் முன்வைத்து சிறப்புரை மற்றும் கோஷங்கள் எழுப்பினர்.

1.ஆந்திரா அரசு வழங்குவது போன்று பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி ஓய்வூதியர்கள் அனைவருக்கும் ஓய்வூதிய பண பலன்கள் மற்றும் ஓய்வூதிய கருவூலம் மூலம் வழங்கிடவும். 2.பேரூராட்சி நகராட்சி பணி வரன்முறை செய்யப்பட்ட nmr ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் அனுமதித்து அரசாணை வழங்கிடவும். 3.பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதி ஜீயீ வட்டி உள்ளிட்ட பணப்பலன்கள் மற்றும் ஓய்வூதிய வழங்கிடவும் 4.பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி அனைத்து ஓய்வு ஊதியர்களுக்கு சிபிஎஸ்,ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்கிடவும்5, உள்ளாட்சி நிதி தணிக்கை துறை மூலம் ஓய்வூதியம் பெறும் பேரூராட்சி ஓய்வூதியர் இறந்தால் குடும்ப ஓய்வு ஊதியர்களுக்கு ரூபாய் 50 ஆயிரம் இறப்பு கால நிதியாக வழங்கிடவும் உள்ளிட்ட 15 கோரிக்கைகளை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இறுதியில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் வேலூர் மாநகராட்சி ஓய்வூதியர்கள் சங்க பொருளாளர் கணேஷ்வரன் நன்றி தெரிவித்து நிறைவு பெற்றது.



# வேலூர் மாவட்டம் அண்ணா சாலை அருகே ஓய்வூதிய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

வேலூர், டிச.13-

ஓய்வூதிய சங்கத்தினர் நலன்களை பாதுகாக்க தமிழக அரசு தலையிட்டு தீர்வு காண கோரியும், ஆந்திர அரசு வழங்குவது போன்று அனைத்து ஓய்வூதியர்களுக்கும் பண பலன்களை கருவூலம் மூலம் வழங்க வேண்டும், ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதி ஜீயீ வட்டி உள்ளிட்ட பண பலன்கள் வழங்கிட வேண்டும், ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர்கள் நல அமைப்பு சார்பில் வேலூர் அண்ணா கலையரங்கம் அருகே சுமார் 30 க்கும் மேற்பட்டோர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




# பழனியில் நடிகர் ரஜினிகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது


திண்டுக்கல், டிச.13-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆயக்குடியில் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை மற்றும் ரஜினி ரசிகர்கள் சார்பில் நடிகர் ரஜினிகாந்தின் 75வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. பிறந்தநாளை முன்னிட்டு முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற பெரியோர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொருவருக்கும் புதிதாக பாத்திரங்கள் கொடுக்கப்பட்டு அவைகளில் இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மேலும் வர இயலாத முதியோர்களுக்கு வீடுகளுக்கு நேரடியாக சென்று உணவு வழங்கப்பட்டது. உணவுகளை வாங்கிச் சென்ற முதியோர்கள் தங்களது வாழ்த்துக்களை நடிகன் ரஜினிகாந்திற்கு தெரிவித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அறக்கட்டளை நிறுவனர் தீனா, ரஜினி ரசிகர் மன்ற நிர்வாகி சுரேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.









தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., மதுரை
மதுரை மண்டலம் – வணிகத்துறை

அனுப்புநர்
பொது மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிட்., மதுரை மண்டலம்,
புறவழிச்சாலை, மதுரை–10

பெறுநர்
திரு பா. இராஜா, வழக்கறிஞர்,
கனக்கன்குடி அஞ்சல், திருப்புவனம்
வட்டம், சிவகங்கை மாவட்டம்–630562
செல்:- 9047339882

கடித எண்:- தநாஅபோக/வணிகம்/ CI-984/2025/நாள்:26.11.2025

அய்யா,

பொருள்:- தநாஅபோக–லாடனேந்தல் அரசு உயர் நிலை பள்ளிக்கு பேருந்து நிறுத்தம் கோரியது – சம்பந்தமாக.

பார்வை:- மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண்:- 16703646/ dt. 03.11.2025

மனுதாரரின் அலைபேசியில் பேசப்பட்டது. மனுதாரர் மனுவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் கிராமத்தில் அரசு உயர்நிலை பள்ளிக்கு பேருந்து நிறுத்தம் அமைத்து தர கோரிய மனு வரப்பெற்றுள்ளது.

மனுதாரர் மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு த.நா.அ.போ.கழகம் (மதுரை) லிட்., மதுரை மண்டலத்தின் மூலமாக மேற்படி வழித்தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளை லாடனேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் நிறுத்தி பள்ளி மாணவ மாணவியர்களை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும் என சுற்றறிக்கை வாயிலாக அனைத்து கிளை மேலாளர்கள் மூலம் மேற்படி வழித்தடத்தில் பணிபுரியும் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒம்/–xxxxxxx
பொது மேலாளர்

//உண்மை நகல் உத்தரவுப்படி//

துணை மேலாளர் (வணிகம்)

நகல்:- உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை.

■ சிவகங்கை மாவட்டம். திருப்புவனம் வட்டம். வாடனேந்தல் கிராமத்தில் அரசு உயர்நிலை பள்ளிக்கு பேருந்து நிறுத்தம் அமைத்து தர கோரி மனு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு வரப்பெற்றுள்ளது. மனுதாரர் மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு த.நா.அ.போ.கழகம் (மதுரை) லிட் மதுரை மண்டலத்தின் மூலமாக மேற்படி வழித்தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளை லாடனேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் நிறுத்தி பள்ளி மாணய மாணவியர்களை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும் என சுற்றறிக்கை வாயிலாக அனைத்து கிளை மேலாளர்கள் மூலம் மேற்படி வழித்தடத்தில் பணிபுரியும் ஒட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது..




■ மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் கலை கல்லூரி கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழா முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்பட்ட ஓவிய போட்டியில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் உதவிகளை வழங்கினார். அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு.அருள்சுந்தரேஷ் குமார், மாற்றுத்திறனாளி நல அலுவலர் சாமிநாதன், வெங்கட சுப்பிரமணி ஆகியோர் உடன் உள்ளனர்.



# மேற்கு தாம்பரம் தி மெட்ராஸ் சேவா சதன் மேல்நிலை பள்ளியில் 117 மாணவ மாணவிகளுக்கு தமிழக அரிசன் விலையில்லா மிதி வண்டிகள்

## தாம்பரம் எம்.எல்.ஏ வழங்கினார்

தாம்பரம். டிச.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள தி மெட்ராஸ் சேவா சதன் மேல்நிலை பள்ளியில் தமிழ்நாடு அரசு விலை யில்லா மிதி வண்டி வழங்கும் விழா பள்ளி உதவி ஆசிரியர் சித்ரா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு உரை யாற்றினார். அதன் தொடர்ந்து பள்ளியில் பயலும் 117 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். அப்போது நிர்வாகிகள் காளியப்பன், ஆர்.ஜீவன், ஆர்.செல்வகுமார், எஸ்.கார்த்திக், ஆர்.அகஸ்டின், கணபதி, முனுசாமி, ஹரீஸ், வாட்டர் முருகன், நவீன், பிரகாகரன், பிரவீன்பகுமார் எம்.லட்சுமி, ஆர்.லட்சுமி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.





# செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள்

திருப்பூர், டிச.13

திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதிய திட்டப்பணிகளை தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று

துவக்கி வைத்து, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய கொளத்துப்பாளையம் முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள், அன்புச்சோலை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார். தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.9யில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதிதாக 2 வகுப்பறைகள் கட்டும் பணியினை துவக்கி வைத்து, முத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை கட்டடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பள்ளியின் வகுப்பறையில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டார்ட் டிவிகளை மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து, உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள், நாட்டராயன் கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் சந்திரசேகர், காங்கேயம் வட்டாட்சியர் தங்கவேல், முத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆல்பர்ட், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.




# பாரதியார் பல்கலைக்கழக பதிவாளரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை, டிச.13-

மாவட்டத் தலைவர் சதாசிவம் தலைமையில் மாநிலத் தலைவர் ரமேஷ் குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மாவட்ட பொருளாளர் முனீஸ்வரி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து செய்தியாளரிடம் நிர்வாகிகள் கூறியதாவது. பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் ராஜவேல் சாதிவெறி வன்ம போக்கை கண்டித்து நாங்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். மேலும் சட்டத்தில் இல்லாத துறைத் தலைவர் சுழற்சி முறை 44 ஆண்டு கால பல்கலை வரலாற்றிலே இல்லாத ஒன்றை ஆட்சிக்குழுவின் ஒப்புதல் பெறாமலே தவறுதலாக செயல்படுத்தியது, நெறிமுறைகளை பின்பற்றாமல் பல்கலைக்கழகத் துறை சென்று அதிகார துஷ்பிரயோகம் செய்து பேராசை மிரட்டியது, இணை பேராசிரியர்களை நீக்கிவிட்டு பேராசிரியரை துணைத்தலைவராக மாற்றிய நிர்வாகம் சட்டத்திற்கு முரணாக மூத்த பேராசிரியர்களை நீக்கிவிட்டு இணை பேராசிரியருக்கு துணைத் தலைவர் பொறுப்பு கொடுத்திருக்கிறார். தன்னுடைய அதிகார வரம்பை மீறி பல்கலைக்கழக விதிகளை மதிக்காமல் நிர்வாகப் பிரிவுகளில் புகுந்து விதிகளை மீறும் செயல்களை செய்யச் சொல்லி மிரட்டுகிறார் என்ற பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில்

150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.






■ புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி தாலுகா மழையூர் கிராமத்தில் குடியிருப்பு பகுதியில் உள்ள வீட்டில் விஷம் உள்ள நல்ல பாம்பு இருந்ததால் சமூக ஆர்வலர் தீயணைப்பு துறைக்கு தெரிவிக்கப்பட்டு தீயணைப்பு வீரர்களால் பிடிக்கப்பட்டன

# போக்குவரத்து கழகத்தில் 100 பஸ்களை ஓரங்கட்ட முடிவு

சென்னை, டிச.13-

தமிழக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில், சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோவை, திருப்பதி, பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் இருந்து, தினமும் 1,080க்கும் மேற்பட்ட, டீலக்ஸ், 'ஏசி' வசதியுள்ள விரைவு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

தினமும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பயணம் செய்து வருகின்றனர். அடுத்த ஒரு மாதத்தில், 20 வால்வோ பஸ்கள் உட்பட, 240 புதிய பஸ்கள், புதிதாக இணைக்கப்பட உள்ளன.

இதற்கிடையே, தென்மாவட்டங்களுக்கு செல்லும் விரைவு பஸ்களில், மிகவும் பழமையான பஸ்களை கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயார் செய்யப் படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் தந்தை 32 ஆம் ஆண்டு நினைவேந்தல்

## எம்எல்ஏ தமிழரசி ரவிக்குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் சு.குணசேகரன், எஸ். மாரியப்பன் கென்னடி பங்கேற்பு

சிவகங்கை, டிச.13

சிவகங்கை மாவட்டம் மான்மதுரையை அடுத்துள்ளது பச்சேரி கிராமம்... தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இயக்கப்பணியாற்றிவரும் பச்சேரி வள்ளல் சிஆர்எஸ் என்ற சி. ஆர்.சுந்தரராஜன்... இவரது தந்தையார் சி. ரெத்தினம்பிள்ளை அவர்களின் 32 வது நினைவேந்தல் நிகழ்ச்சியானது அவரது சொந்த கிராமமான பச்சேரி கிராமத்தில் நடைபெற்றது...



காலையில் சிஆர். சுந்தரராஜன் உள்ள அவரது முழு உருச்சிலைக்கு சிஆர்எஸ் குடும்பத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்... அதன்பின் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர்

ஆ. தமிழரசி ரவிக்குமார், சட்டமன்ற மேனாள் உறுப்பினர், முன்னாள் எம்எல்ஏ மானாமதுரை நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, சட்டமன்ற மேனாள் உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் சு. குணசேகரன் , சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம், மானாமதுரை கிழக்கு செயலாளர் துரை. இராஜாமணி , திருப்புவனம் கிழக்கு ஏனாதி கடம்பசாமி , வடக்கு அ. முத்துச்சாமி , அதிமுக ஒன்றிய செயலாளர் சிவ சிவ ஸ்ரீ தர் , அதிமுக மாவட்ட ஊராட்சி மேனாள் தலைவர் சிவதேவ்குமார் , அதிமுக பச்சேரி அத்தா ரகுமான் , மாவட்ட விவசாய அணி சொக்கனாதிருப்பு டிஆர்.. சேகர் , அச்சங்குளம் முருகன் , முனைவர் இளங்கோ , மாவட்ட திமுக செய்தித்தொடர்பாளர் கவுன்சிலர் அயூப் கான் , அரசனூர் ஊராட்சி மேனாள் தலைவர், மாவட்ட மகளிரணி செல்வராணி அய்யப்பன் , வேம்பத்தூர் ஊராட்சி மன்ற மேனாள் தலைவர் மாவட்ட பிரதிநிதி வி. எம். சமயமுத்து , ஒன்றிய இளைஞரணி து அமைப்பாளர் அறங்காவலர் அ. கணேசன் வேம்பத்தூர் ஜெகனாதன் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்...

காங்கிரஸ் நகரத் தலைவர் கவுன்சிலர் விஜயகுமார் , வட்டாரத்தலைவர்கள் கரும்பாவூர் உடையார், காளையார்கோவில் மதியழகன் , திமுக மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சிங்கமுத்து , காங்கிரஸ் துணைத்தலைவர் சண்முகராஜன் , நகர்மன்ற உறுப்பினர் சி. எல். சரவணன் , பெரியகோட்டை ரவீந்திரன் , ஓய்வுபெற்ற அரசு அலுவலர், கிராம ஒருங்கிணைப்பாளர் பொன்மலையான் , மேலமங்களம் முரளீதரன் , ரெட் ரோஸ் பழனிச்சாமி , நாலுகோட்டை ஜெகன் ஆர்ட்ஸ் கருப்பையா உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள், சுற்றுவட்டார கிராமப் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்...

இதனிடையே நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு மற்றும் வேஸ்டி சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது... நிகழ்ச்சி ஏற்பாடுகளை பச்சேரி வள்ளல், காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் சி. ஆர். சுந்தரராஜன் குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்...



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் கடந்த (டிச11 ) மண்டலம்1, வார்டு1, செட்டிபாளையம் பகுதியில் 15வது மத்திய நிதி குழு திட்டத்தின் கீழ் புதிதாக சிறு பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி செயற்பொறியாளர் (பொ) ராமோகன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் நேற்று முன்தினம் மண்டலம்1, வார்டு1, செட்டிபாளையம் பகுதியில் உள்ள நுண் உரம் செயலாக்கம் மையத்தை (Mcc Centre) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி செயற்பொறியாளர் (பொ) ராமோகன், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் இருப்பறையில் மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்க்கும் பணி டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) புஷ்பாதேவி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்..



■ திருப்பூரில் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் மனித உரிமைகள் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ் மற்றும் அனைத்துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



## சிலம்பம், கராத்தேவில் பிளாக் பெல்ட் பெற்ற மாணவர்களுக்கு சினிமா சண்டை பயிற்சியாளர் ஜாகுவர் தங்கம் சான்றிதழ், பெல்ட் வழங்கி கவுரவிப்பு

தாம்பரம், டிச.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூரில் உள்ள பெனியல் ஸ்போர்ட்ஸ் அகடாமியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கராத்தே, சிம்பலம் உள்ளிட்ட தற்காப்பு கலையில் கற்றறிந்தவர்களுக்கு தகுதி தேர்வு நடைப்பெற்றது. இதில் இந்த ஆண்டுக்கான கராத்தே தகுதி தேர்வு மாணவ, மாணவியர்களுக்கு பலர் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர்.

எல்.கே.ஜி. மாணவர் முதல் கல்லூரி மாணவர்கள் வரை ஒவ்வொருவரும் சிலம்பம், வால் வீச்சு, மான்கொம்பு என பலரும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர். அவரவரின் தகுதி மற்றும் திறமைக்கேற்ப மஞ்சள், ஆரஞ்சு, பச்சை, நீலம் போன்ற கலர் பெல்ட்கள் வழங்கப்பட்டது. தகுதி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு திரைப்பட சண்டை பயிற்சி இயக்குனர் ஜாகுவார் தங்கம் சான்றிதழ் மற்றும் பெல்ட் வழங்கி கவுரவித்தார்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் திரைப்பட சண்டை பயிற்சி இயக்குனர் ஜாகுவார் தங்கம் பேசும்போது, இன்றைய குழந்தைகள் செல்போனுக்கும், போதை பொருட்களுக்கு அடிமையாக உள்ளனர். இதனை கராத்தே, சிலம்பம் போன்ற தற்காப்பு கலையை கற்பதன் மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பெனியல் ஸ்போர்ட்ஸ் அகடாமி இயக்குனர் ஆர்.காளிங்கன், கிராண்ட் மாஸ்டர் எம்.ஆறுமுகம், செயலாளர் ரகுநந்தன், பொருளாளர் எஸ்.சங்கர், மாஸ்டர் சந்தியா, பயிற்சியாளர் மாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது



திருப்பூர், டிச.13-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் எதிர்வரும் (27.12.2025) அன்று நடைபெறும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட நிர்வாகம், மகளிர் திட்ட அலுவலகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருப்பூர் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் திருப்பூர் மாநகராட்சி, எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலை கல்லூரியில் 27.12.2025 அன்று நடைபெற உள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் திருப்பூர், ஈரோடு. கோவை உள்ளிட்ட பெருநகரங்களிலிருந்து முன்னனி நிறுவனங்கள் கலந்து கொண்டு ஆட்களை தேர்வு செய்ய உள்ளார்கள். மேலும், இம்முகாமில் சுமார் 5000 வேலைநாடுநர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேலை நாடுநர்களுக்கும் இவ்வேலை வாய்ப்பு முகாம் குறித்து அறியும் பொருட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும், மேலும். இம்முகாமில் அதிகளவில் வேலையளிக்கும் நிறுவனங்கள் பங்கேற்க உரிய பணிகள் மேற்கொள்ளுமாறும், வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் இடத்தில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்திடுமாறும் துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கோவை, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஜோதிமணி, துணை இயக்குநர். (தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்) ஜெயமுருகன், பொது மேலாளர் (முன்னோடி வங்கி) எஸ்.துர்க்காபிரசாத், உதவி இயக்குநர், மாவட்ட தொழில் மையம் ஆர்.ஜெயலட்சுமி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரே.சுரேஷ் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.






## ராமன்புதூரில் தனியாக தவித்த முதியவரை மீட்டு பாதுகாப்பு வழங்கிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் நிமிர் குழுவினர்

கன்னியாகுமரி, டிச.13

கன்னியாகுமரி மாவட்டம் ராமன்புதூரைச் சேர்ந்த 87 வயது முதியவர் சபரி யானந்தன் என்பவர் குடும்பத்தார் கவனிப்பின்றி பலவீனமான நிலையில் சாலையை கடக்க முடியாமல் தவித்துவருவதாக நிமிர் குழுவினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது.

அதைத் தொடர்ந்து, காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸி.ஸ்டாலின் “ நிமிர் ஸ்ரீ முதியோர் பாதுகாப்பு திட்டம்” உத்தரவின்படி ராமன்புதூர் பகுதிக்கு சென்ற நிமிர் குழுவினர் ஜெயந்தி , சுமதி மற்றும் சேகர் ஆகியோர் முதியவரை சாலை ஓரத்தில் துயரமான நிலையில் நிற்பதை கண்டு விசாரித்தபோது அவர் குடும்ப ஆதரவு இல்லாமல் தனியாக வாழ்ந்து வருவது மற்றும் உடல் நலக் குறைவால் சிரமப்படுவதும் தெரிய வந்தது.

உடனடியாக தகவல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று முதியவரின் பாதுகாப்பு நிலையை மதிப்பிட்டு தேவையான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர். பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கன்னியாகுமரியில் செயல்பட்டு வரும் “ஸ்மைல் முதியோர் பாதுகாப்பு இல்லத்தில் அவரை பாதுகாப்புடன் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்ட திமிர் குழுவினருக்கும் ஸ்மைல் இலவச முதியோர் பராமரிப்பு பாதுகாப்பு மையத்திற்கும் மக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

ஆதரவற்ற முதியவர்களின் நலனுக்காக காவல்துறை தொடர்ந்து செய்யும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் சமூகத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

## கொடைக்கானல் மன்னவனூர் வனப்பகுதியில் பல லட்சம் மதிப்புள்ள மரங்கள் வெட்டி கடத்தல்

### ரேஞ்சர், வனவர்கள், கார்டு உட்பட 4 பேர் சஸ்பெண்ட்

திண்டுக்கல், டிச.13-

திண்டுக்கல் மாவட்டம். கொடைக்கானல் மேல்மலை பகுதியில் உள்ளது மன்னவனூர் வனசரகம். கொடைக்கானல் வன கோட்டத்திற்கு உட்பட்டது இந்த வனசரகத்தில் உயர் நீதி மன்ற உத்தரவுப்படி மன்னவனூர வனசரக பகுதியில் உள்ள 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள சவுக்கு மரங்களை அகற்றி சோலை மரக்கன்றுகள் நடும்பணி நடைபெறுகிறது. இதே போல பேரிஜம், பூம்பாறை வனசரக பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. சவுக்கு மரங்களை வெட்டி அந்த மரக்கட்டைகள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் லாரிகள் கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகிறது. ஒப்பந்தம் எடுப்பவர்கள் வனத்துறைக்கு குறிப்பிட்ட கட்டணத்தை ஏலத் தொகையாக செலுத்த வேண்டும். இந்நிலையில் குறிப்பிட்ட அளவை விட பலலட்சம் மதிப்புள்ள மரங்கள் வெட்டி கடத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன் அடிப்படையில் கடந்த சில நாட்களாக



இந்த வனசரக பகுதியில் மதுரையை சேர்ந்த தமிழ்நாடு வன உயிரின குற்ற தடுப்பு சிறப்பு பிரிவினரும், திண்டுக்கல் வன பாதுகாப்பு படையினரும் ஆய்வுகள் நடததினர். இது போல கொடைக்கானல் ஏசி எப் கருப்பையா தலைமையில் ஒரு குழுவினரும் ஆய்வு செய்தனர். திண்டுக்கல் மாவட் வனபாதுகாவலர் முகமது சகாப்பும் ஆய்வு செய்தார். இதில் இந்த மன்னவனூர் வன சரகத்தில் பல லட்சம் மருப்புள்ள ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டி கடத்தப்பட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மன்னவனூர் வனசரகத்தின் ரேஞ்சராக உள்ள திருநிறை செல்வன். மன்னவனூர் வனசரகத்தில் கவுஞ்சி பகுதி வனவராக உள்ள அம்ச கணபதி, மன்னவனூர் வனவர் சுபாஷ், கார்டு வெங்கட்ராமன் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளனர். வன பகுதியில் மரக்கடத்தலுக்கு உடந்தையாக இருந்த ரேஞ்சர், வனவர்கள். கார்டு உட்பட 4 பேர் கூண்டோடு சஸ்பெண்டு செய்யப்பட்டு இருப்பது கொடைக்கானல் வனத்துறை மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக சந்திக்கும் நிகழ்வில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியம் சின்னக்காம்பாளையம் பேரூர் கழக செயலாளர் ரா. பன்னீர்செல்வம் தமிழக முதல்வரை சந்தித்து வாழ்த்து பெற்றார்.





■ மதுரை மாவட்டம்,சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், வண்டபுலி கிராமத்தில் ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியஉதவி பொறியாளர் கணேஷ்குமார் உடனிருந்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161